# 'நித்யானந்த' லீலைகள்

பி.ஆர். ஆனந்த்

சுவாமி நித்யானந்தா இப்போது 'காமானந்தா'வாக மாறியிருக்கிறார். நடிகை ஒருவருடன் நித்யானந்தா உல்லாசமாக இருக்கும் காட்சிகள், அவரை நம்பியிருந்த எண்ணற்ற பக்தர்களைத் தண்ணீரில் பட்ட எண்ணெய் போல் வெடிக்கவைத்துள்ளது. 'கதவைத் திற... காற்று வரட்டும்' என்று துவங்கிய இவரது ஆன்மீகப் பிரச்சாரம், இன்று 'கேமராவைப் பார்! காமப் படம் கிடைக்கும்' என்ற ரேஞ்சுக்கு விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.



நித்யானந்தாவின் ஒரிஜினல் பெயர் ராஜசேகர். பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு திருவண்ணாமலையிலேயே மலைக்கு மேல் உள்ள சாமியார் ஒருவரைச் சந்தித்துள்ளார். 'ஆன்மீக ஈடுபாடு' சிறிய வயதிலேயே வந்தது போல் காட்டிக் கொண்ட நித்தியானந்தா, அந்த 'அய்யா' சாமியாரிடம் கொஞ்ச காலம் சீடனாக இருந்து பார்த்தார். ஆனால் அதில் பெரும் வெற்றி பெற முடியவில்லை.

இந்நிலையில் பெங்களூரில் உள்ள 'திருச்சி சாமியார்' என்பவரின் நட்பு கிடைத்தது. அவர் உண்மையிலேயே ஆஸ்ரமம் நடத்தி வருபவர். அவரிடம் சில காலங்கள் இருந்தார் நித்யானந்தா. நாளடைவில் திருச்சி சாமியார் இறந்து போனார். அதன் பிறகு அவருடைய உண்மையான சீடர்கள் தனியாக அங்கேயே ஆஸ்ரமம் நடத்தி வந்தார்கள். ஆனால் நித்யானந்தா மட்டும் அங்கிருந்து விலகி, தன் ஆன்மீக வாழ்க்கையை ஸ்லோவாகத் துவக்கினார். இப்படித்தான் நித்யானந்தா ஆன்மீகவாதியான கதை போகிறது. இப்போது அமெரிக்காவில்கூட ஆஸ்ரமம் துவங்கும் அளவிற்கு பெரிய ஆன்மீகவாதி (!) ஆனார்.

இந்நிலையில் சில அரசியல் புள்ளிகளின் தயவு நித்யானந்தாவுக்குக் கிடைத்தது. 'அவர்களுக்கு நான் பினாமி' என்றெல்லாம் பேசி வந்ததாகத் தகவல் உண்டு. அதைப் பின்புலமாக வைத்துக் கொண்டு பெங்களூரில் தனியாக ஓர் ஆஸ்ரமம் துவங்கிப் பிரபலமானார் நித்யானந்தா. உலகம் முழுவதும் தன் ஆஸ்ரமக் கிளைகளை ஏற்படுத்திய நித்யானந்தா, தான் பிறந்த ஊரை மறக்கவில்லை! திருவண்ணாமலையில் ஆன்மீக தோட்டம் ஒன்றை அமைக்கும் முயற்சியில்